**கவனிக்க.-** இவ் வர்த்தமானியின் பகுதி VI இல் 2013 ஆம் ஆண்டிற்கான ஹோமியோபதி மருத்துவர்களின் பெயர்ப்பட்டியலொன்று மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகிறது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1888 - 2014 නොවැම්බර් මස 07 වැනි සිකුරාදා - 2014.11.07

*1888 ஆம் இலக்கம் – 2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) – பொது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நாயகத்தின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 1060 |

| | பக்கம் |
|---|---|
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | – |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 1061 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** டிஎவ்சீசீ வங்கி (நீக்கல் மற்றும் விளைவாந் தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டமூலம் 2014, ஒற்றோபர் 03 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2014, நவெம்பர் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, நவெம்பர் மாதம் 14 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# அரசாங்க அறிவித்தல்கள்

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

*திருமணத்தினை நிறைவேற்றுவதற்காக தேவாலயங்களை பதிவு செய்தல்*

*விவாகப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் (112 ஆம் அத்தியாயம்) 10 ஆம் பிரிவின் ஒழுங்குவிதிகளுக்கிணங்க இலங்கையின் பதிவாளர் நாயகம் ஏக்கநாயக்க முதியன்சேலாகே குணசேகர ஆகிய நான், பிரசித்த கிறிஸ்தவ தேவாலயமாக உபயோகிக்கப்படும் பின்வரும் கட்டிடம் திருமணத்தினை நிறைவேற்றுவதற்காக முறைப்படி பதிவு செய்யப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கிறேன்.*

| இலக்கம் | பதிவு செய்யப் பட்ட திகதி | விபரம் | அமைவிடம் | மதகுரு, உரிமையாளர் அல்லது பொறுப்பாளர் | கட்டிடம் பதிவு செய்யப்பட்டது எந்த மதத்திற்காக |
|---|---|---|---|---|---|
| 1451 | 2014.09.17 | புனித அந்தோனியார் கத்தோலிக்க தேவாலயம் | தெற்கு கடவத்த வென்னப்புவ | வண. பிதா பேனாட் சாந்த பர்னாந்து | ரோமன் கத்தோலிக்கம் |

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, ஒற்றோபர் 16.

11-79/1

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

சான்றிதழ் இலக்கம் 1451

*கட்டிட பதிவுச் சான்றிதழ்*

*விவாகம் பதிவு செய்தற் கட்டளைச் சட்டத்தின் (112 ஆம் அத்தியாயம்) 10 ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் வேண்டுகோள் மற்றும் பிரகடனங்களுக்கிணங்க ஏக்கநாயக்க முதியன்சேலாகே குணசேகர ஆகிய நான், பிரசித்த தேவாலயமாக உபயோகிக்கப்படும் கீழ் விபரிக்கப்படும் கட்டிடம் விவாகத்தினை நிகழ்த்துவதற்காக முறையான விதத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.*

| விபரம் | அமைவிடம் | | மாவட்டம் | மதகுரு, உரிமையாளர் அல்லது பொறுப்பாளர் | கட்டிடம் பதிவு செய்யப்பட்டது எந்த மதத்திற்காக |
|---|---|---|---|---|---|
| | கிராமம் அல்லது வீதி மற்றும் நகர பிரிவு | பற்று,கோறளை அல்லது மாவட்டத்தின் வேறு பிரிவு | | | |
| புனித அந்தோனியார் கத்தோலிக்க தேவாலயம் | தெற்கு கடவத்தை வென்னப்புவ | தெற்கு பிட்டிகல் கோறளை | புத்தளம் | வண. பிதா பேனட் சாந்த பர்னாந்து | ரோமன் கத்தோலிக்கம் |

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பத்தரமுல்லை,
2014, ஒற்றோபர் 16.

11-79/2

**காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 120) கீழான அறிவித்தல்**

கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் இரண்டாவது நிரலில் குறிப்பிடப்படும் காணி மற்றும் மூன்றாவது நிரலில் குறிப்பிடப்பட்டிருக்கும் உறுதிகளுக்குரிய முதலாவது நிரலில் காணப்படும் தற்பொழுது சிதைவடைந்து அல்லது கிழிந்துபோயுள்ள காணியினை பதிவு செய்த புத்தகம்/ ஏடு மீண்டும் பூரணமாக தற்காலிகமாக தயாரிக்கப்பட்டுள்ளதனால் காணி பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் (120 ஆம் அத்தியாயம்) 4 ஆவது பிரிவிற்கிணங்க இத்தால் அறிவிக்கின்றேன்.

2. 2014.11.07 ஆந் திகதி தொடக்கம் 2014.11.21 ஆந் திகதிவரை அனைத்து வேலை நாட்களிலும் மு. ப. 10.00 மணி தொடக்கம் பி. ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் எந்தவொரு நபருக்கும் மேற்குறிப்பிடப்பட்ட தற்காலிக ஏட்டினை தெல்கந்த காணிப் பதிவகத்தில் பரிசீலனை செய்து பார்க்க முடியும்.

3. அத்தற்காலிக ஏட்டில் எதுவிதமான அல்லது அதன் குறிப்பில் அடங்கியுள்ள எந்தவொரு விடயம் தொடர்பாக எதுவிதமான ஆட்சேபனையினை வெளிப்படுத்துவதற்கு விரும்பும் நபர் மூலம் அல்லது ஏதாவது குறிப்பு அல்லது ஏதாவது குறிப்பினால் விடப்பட்டிருக்கும் விடயத்தினை சேர்ப்பதற்கு வேண்டுகோளினை சமர்ப்பிக்கும் நபர் மூலம் அதன் ஆட்சேபனையினை அல்லது வேண்டுகோள் அடங்கிய கடிதத்தினை விபரத்துடன் தெளிவாக அதனை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் 2014.11.28 ஆந் திகதிக்கு முன்பதாக இங்கு கீழ் ஒப்பமிடப்பட்டவர்களுக்கு கிடைக்கக்கூடியதாக பதிவாளர் நாயகம் திணைக்களத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

**அட்டவணை**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| பதிவு செய்யப்பட்ட புத்தகங்களில் சிதைவடைந்த ஏடுகள் பற்றிய விபரங்கள் | காணியின் விபரம் | பதிவு செய்யப்பட்ட உறுதிகளின் விபரங்கள் |
| கொழும்பு மாவட்டத் தின் தெல்கந்தை காணிப் பதிவகத்தில் M என்னும் பிரிவில் 2660 ஆவது புத்தகத் தில் 287 வது ஏடு. | மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில் பல்லே பற்று சல்பிட்டி கோறளையில் நுகேகொடையில் அமைந்துள்ள "அம்பகஹவத்த அல்லது கோன்கஹவத்த" என்னும் இடத்திலிருந்து பிரித்தொதுக்கப்பட்ட 1B என்னும் துண்டிற்கு எச். எச். சுபசிங்க அனுமதிபெற்ற நிலஅளவையாளர் மூலம் 2002.08.31 ஆந் திகதி அளவிடப்பட்ட இலக்கம் 1975 ஆம் இலக்க அளவிடை பிரகாரம் எல்லைகள் :-<br><br>வடக்கு : வரிப்பணம் இலக்கம் 72/2 மற்றும் 72/4, கந்தவத்த வீதி ;<br>கிழக்கு : லொட் 1A ;<br>தெற்கு : லொட் 1C மற்றும் லொட் 1E ;<br>மேற்கு : இலக்கம 523 அளவீட்டின் லொட் 5.<br><br>விஸ்தீரணம் : 0ஏ. 0றா. 6.93பே. | 1. எஸ்.ஏ.எம்.ஏ.சீ.ஜே.எஸ்.கே.சேனாரத்ன பி. நொ. மூலம் எழுதி அத்தாட்சிப்படுத் தப்பட்ட 2006.09.26 ஆந் திகதிய 3807 ஆம் இலக்க அறுதி உறுதி.<br><br>2. எஸ்.ஏ.எம்.ஏ.சீ.ஜே.எஸ்.கே.சேனாரத்ன பி. நொ. மூலம் எழுதி அத்தாட்சிப்படுத் தப்பட்ட 2006.09.26 ஆந் திகதிய 3808 ஆம் இலக்க அறுதி உறுதி. |

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

எனது இல. : ஆர்ஜீ/என்பீ/11/2/61/2014/ஏடு. தயா.
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

11-78

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

**மக்கள் வங்கி - லக்கி பிளாசா கிளை**

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 டி என்னும் பிரிவின் கீழ் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 2014, யூன் 26 ஆந் திகதி நடைபெற்ற அவர்களின் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

"குருன்னான்சலாகே டொன் பாலித்த ஸ்ரீலால் என்பவர், மக்கள் வங்கி சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எஸ். டீ. என். பிரேமதாச என்பவரால் இரண்டும் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2014.01.16 ஆந் திகதிய 1816 ஆம் இலக்க ஈட்டு

முறிமீதும் 2013.12.18 ஆந் திகதிய 1796 ஆம் இலக்க ஈட்டு முறிமீதும், கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஏ. ஏ. எஸ். டபிள்யூ. அமரசிங்க என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2009.04.22 ஆந் திகதிய 8415 ஆம் இலக்க ஈட்டு முறிமீதும் வருமதியாகவுள்ள கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராதலால், சொல்லப்பட்ட 1816, 1796, 8415 ஆம் இலக்க முறிகள் மீது இரண்டு கோடி ஐம்பத்தேழு இலட்சத்து எண்பத்தோராயிரத்த எழுநூற்று தொண்ணூற்று நான்கு ரூபா இருபத்தொன்பது சதம் (ரூ.2,57,81,794.29) கொண்ட தொகை இப்பொழுது மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளதாலும், மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை, 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தினால் அவர்களுக்குரித்தாக்கப் பட்ட தத்துவத்தின் கீழ் சொல்லப்பட்ட ஈட்டு முறிகள் மூலம் சொல்லப்பட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் (1) ஐம்பத்தேழு இலட்சம் ரூபா (ரூ. 57,00,000) கொண்ட தொகையையும் 2014.01.11 ஆம் திகதி முதல் ஆண்டொன்றுக்கு 18% வட்டியையும், (2) இருபத்தெட்டு இலட்சம் ரூபா (ரூ. 28,00,000) கொண்ட தொகையையும் 2014.01.11 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு 18% வட்டியை யும், (3) அறுபது இலட்சம் ரூபா (ரூ. 60,00,000) கொண்ட தொகையையும் 2013.12.12 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு 18% வட்டியையும், (4) இருபத்தைந்து இலட்சம் ரூபா (ரூ. 25,00,000) கொண்ட தொகையையும் 2013.12.15 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு 16% வட்டியையும், (5) முப்பது இலட்சம் ரூபா (ரூ. 30,00,000) கொண்ட தொகையையும் 2013.12.26 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு 18% வட்டியையும், (6) ஐம்பது இலட்சம் ரூபா (ரூ. 50,00,000) கொண்ட தொகையையும் 2014.02.12 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு 19% வட்டியையும், மற்றும் (7) ஏழு இலட்சத்து எண்பத்தோராயிரத்து எழுநூற்று தொண்ணூற்று நான்கு ரூபா இருபத்தொன்பது சதம் (ரூ. 7,81,794.29) கொண்ட தொகையையும் 2014.01.24 முதல் ஆண்டொன்றுக்கு 15% வட்டியையும் செலவுத் தொகைகளையும் வேறு விற்பனை இறுப்பனவுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் (எவையேனும்) பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக, கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் ஈ. எஸ். ராமநாயக்க அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் ஹேவாகம் கோறளையில் பள்ளே பத்துவில் கடுவெல பிரதேச சபை எல்லைகளினுள் மாலபே கிழக்கு மற்றும் கடுவெல பிரதேச செயலாளர் பிரிவு, இல. 476 கிராம அலுவலர் பிரிவினுள் மாலபேயில் அமைந்துள்ளதும், அதன்மீதுள்ள கட்டிடங்கள், மரங்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் "மொஹென்கொடெல்லத் தோட்டம்" எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் கே. டீ. ஜீ. வீரசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2000.01.11 ஆந் திகதிய 1737 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துரைக்கப்பட்டதும், காணித்துண்டம் "1" என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும், சொல்லப்பட்ட காணித்துண்டம் "1" இன் எல்லைகள் பின்வருமாறு- வடக்கு : 1635 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 60 ; கிழக்கு : 1635 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 81 ; தெற்கு : 1635 ஆம் இலக்க வரைபடத்தல் காணித்துண்டம் 82 ; (6மீ. அகல வீதிக்கான ஒதுக்கிடம்) மற்றும் ; மேற்கு : 1635 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 92 ; பரப்பளவில் இது சொல்லப்பட்ட 1737 ஆம் இலக்க வரைபடத்தின்படி இருபத்துநான்கு தசம் ஐந்து ஒன்று பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 24.51பே.) கொண்டுள்ளதுடன் ஹோமாகம காணிப்பதிவகத்தில் B 304/80 இல் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

1635 ஆம் இலக்க வரைபடத்தில் எல்லாம் குறித்துக்காட்டப்பட்ட 81, 9, 3, 83 மற்றும் 99 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டங்களின் மீதும் 1595 ஆம் இலக்க வரைபடத்தில் எல்லாம் குறித்துக் காட்டப்பட்ட 82, 85, 4, 15 மற்றும் 95 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டங்களின் மீதும் 1595 ஆம் இலக்க வரைபடத்தில் 22 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டத்தின் மீதும் 719 ஆம் இலக்க வரைபடத்தில் 22 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டத்தின் மீதுமான செல்வழியுரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிராந்திய முகாமையாளர்,
கொழும்பு தெற்கு.

மக்கள் வங்கி,
வலயத் தலைமையலுவலகம்- (மேற்கு வலயம்-01),
இல.11, டியூக் வீதி,
கொழும்பு 01.

11- 152

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.*** - இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

**அட்டவணை - 2014**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 07.11.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.10.2014 |
| | | வெள்ளி | 14.11.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.10.2014 |
| | | வெள்ளி | 21.11.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.11.2014 |
| | | வெள்ளி | 28.11.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.11.2014 |
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 05.12.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.11.2014 |
| | | வெள்ளி | 12.12.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.11.2014 |
| | | வெள்ளி | 19.12.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.12.2014 |
| | | வெள்ளி | 26.12.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.12.2014 |

**அட்டவணை - 2015**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | வெள்ளி | 02.01.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.12.2014 |
| | | வெள்ளி | 09.01.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.12.2014 |
| | | வெள்ளி | 16.01.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.01.2015 |
| | | வெள்ளி | 23.01.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.01.2015 |
| | | வெள்ளி | 30.01.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.01.2015 |

**பீ. எச். எல். வீ. டி சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.